# சிரித்திரன்



சவாரித்தம்பர்: ஆனையிறவு நிலமை எப்படி இருக்கு?

சின்னக்குட்டி:- சினிமாப் பாட்டு வரி ஒன்றுதான் ஞாபகத்துக்கு வருகுது.........

''பட்டத்து யானையும் சாயக் கண்டேன்...........

ஆடி, ஆவணி 1991 12 - 00

யாழ் குடா நாட்டின்

**மோட்டார் சைக்கிள்**

**மோட்டார் இயந்திர**

**உதிரிப் பாகங்கள்**

விநியோகஸ்தர்கள் - விற்பனையாளர்கள்

# காந்தா மோட்டோர்ஸ்

அர்ச்சுனா வீதி - 54, (ஸ்ரான்லி வீதி) யாழ்ப்பாணம்.

# சிரித்திரன்

செய்தொழிலே தெய்வம்
சிரிப்பே சிதையம்

நகை - 29 ஆனி, ஆடி 1991 சுவை - 3


# நிலைக்கண்ணாடி

## கலை முத்துக்கள் பதித்த கிரீடம்.

ஒரு காலத்தில், தாய்மொழி தமிழ்மொழியில் பேசினால் 10 சதம் குற்றப்பணம் கட்டாயம் செலுத்த வேண்டும். வகுப்பறைகளில் ஆங்கில மொழியிலேயே பேசவேண்டும். காப்பியப் பெருமை, இலக்கியச் செழுமை, இலக்கணவளம் மிகுந்த நம் தாய்மொழியை தப்பித்தவறித்தானும் உதடுகள் உதிர்த்து விட்டால் தண்டனையே. இந்த நிலை இன்று பழங்கதையாகி விட்டது.

ஆங்கிலமொழி, அறிவை அகலமாக்கியது ஆனாலும் அடிமை மனப்பாங்கை வளர்த்துக்கொள்ளவும் ஏதுவாகியது. கணிதம், விஞ்ஞானம், மருத்துவம், சட்டம் என்று பல்வேறு துறைகளில் மேதைகள் உருவானபோது கூடவே மம்மி, டடியும் தமிழன் மடியில் வந்து குந்திக்கொண்டது. '' எங்கட பிள்ளைக்கு டான்ஸ் (Dance), மியூசிக் (Music), ஆட் (Art) எல்லாம் வராது. அதால லோ (Law) செய்யுது '' என்று பெருமைப்பட்ட அன்னையர்கள் மலிந்தனர்.

ஆனால் இந்த இரண்டும் கெட்டான் இழிநிலை மாறுவதற்கு கால்கோளாக ஒரு விழா தமிழ் அன்னைக்கு முடிசூட்டும் விழா, தமிழ்த் தாய்க்கு கலை முத்துக்கள் பதித்த கிரீடம் அணிந்து வைரம் பதித்த செங்கோலேந்தி அரியணையில் அமர்த்தியிருப்பதாக ஒரு காட்சி மனக்கண்ணில் விரிகிறது. பாரம்பரிய மிக்க தமிழ்ப் பண்பாட்டின் பதரை நீக்கி கருத்து முத்துக்கள் கொழிக்க வைத்த விழா.


யுத்தத்தின் மத்தியிலும் விழாவா எனச் சலித்தவர்கள் பரணி பாடப்படுகையில் தம்மை மறந்து தாளம் போட்டனர். மங்கல இசையுடன் ஆரம்பமாகி நாட்டியம், நாடகம், வழக்காடுமன்றம் என நிகழ்ச்சிகள் தொடர நள்ளிரவு கடந்தும் விழிகள் மூட மறுத்த விந்தை நிகழ்ந்தது. கலை நிகழ்வுகளால் மேடை முகிழ்ந்த போது தாயக மண்ணில் கலைஞர்கள் தோன்றவில்லையோ என்ற கவலை பறக்க நெஞ்சம் மகிழ்வில் மிதந்தது.

போரா சமாதானமா எனச் சவால் விட்டவர்கள் சஞ்சலப்பட்டு நிற்க ஏரும் பிடிக்கத் தெரியும். போரும் நடத்தத் தெரியும் என்று மின்னொளி வெள்ளத்தில் திரண்ட மக்கள் கூட்டம் பதில் சொல்லியது.

வேரின்றி விருட்சமில்லை, போராளிகள் இன்றி மக்கள் இல்லை. போராளிகளும், மக்களும் இணைந்து எடுத்த பெருவிழாவே முத்தமிழ் விழா. மின்சாரம், எரிபொருள் என வரும் எத்தனையோ ' இல்லை ' களோடு சேர்த்து தமிழ் மக்களிடையே அச்சமும் இல்லை என்பதை எடுத்துக் காட்டிய விழாவாக அமைந்துவிட்டது.

மண்ணிற்கும், மக்களுக்காகவும் வாழ்ந்தவர்களுக்கு விருது வழங்கப்பட்டமை விழாவின் உச்சக்கட்ட நிகழ்வு எனலாம். மக்களால் பெரிதும் நேசிக்கப்படும் தலைவர் அவர்களே நேரில் வந்து தம்மைக் காண ஆவலாய் இருந்த மக்களின் அலையோசை வானில் முட்டும் நேரம் தம் கைப்பட விருது வழங்கி கௌரவித்த போது உண்மையிலேயே தமிழன்னை தனது வீரப்புதல்வனை ஆரத்தழுவியது போல இருந்தது.

மொத்தத்தில் முத்தமிழ் விழா நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாகவே இருந்தது. இனிமேல் வருடந்தோறும் பூம்புகார் பூக்கட்டும். தாயகமும் தாய்மொழியும் செழிக்கட்டும்.



பரமேஸ்வரி — நல்லூர்

0 நான் ஒரு சங்கீத மாணவி முன்னேற என்ன செய்ய வேண்டும்?

ஃ சங்கீதம் சாதகம் பண்ண வேண்டும்.
தாயாரிற்கும் சாதப் பண்ண உதவ வேண்டும்.

க. முருகேசன் — வல்வெட்டித்துறை

0 எப்போது நாம் நிம்மதியாக இருக்கிறோம்?

ஃ நிம்மதிக்கே இடமில்லை! சமாதான காலத்தில் உலகம் யுத்தத்திற்கு ஆயத்தம் செய்கிறது; யுத்த காலத்தில் சமாதானம்பற்றிப் பேசுகிறது

நாகமணி மகேந்திரலிங்கம் — சங்கானை

0 சிந்திக்கத்தெரிந்த மனிதன் செயற்படுவதில்லையே?

ஃ சந்திரனிற்குப் போவதைச் சிந்திப்பது சுலபம்; செயற்படுத்துவதெனில் எத்தனை இடர்கள்.

ம. மணிசேகரம் — உடுப்பிட்டி

0 பெண் அடிமை பற்றி உமது கருத்து யாதோ?

ஃ பெண்ணே பெண்ணை அடிமையாய் வைத்திருக்கும்போது அடியேன் யாது கூற? மாமியார் வீடு இன்னொரு 'பூஸா காம்ப்' இல்லையா?

0 எதை நம்பக் கூடாது?

ஃ அரவத்தின் அரவணைப்பை நம்பினாலும், அரசியல்வாதியின் அரவணைப்பை நம்பக் கூடாது!

மாணிக்கம் ... அடம்பன்

0 இன்று எதற்கு தட்டுப்பாடில்லை?

ஃ அத்தியாவசியப் பொருட்களிற்குத் தட்டுப்பாடிருந்தாலும். கவலைக்குத் தட்டுப்பாடில்லை

0 எவன் ஏமாளி?

ஃ கானல் நீரில் தண்ணீர்ப்பந்தல் போடுபவன்.

சேதுகாவலர் — கரவெட்டி

0 யார் கர்நாடகஇசையின் பாதுகாவலர்?

ஃ மங்கள இசைஞர்.

மு. பொன்னு — துன்னாலை

0 அமெரிக்கர்பற்றி உமது கருத்து?

ஃ அணுநீதி கண்ட அமெரிக்கர்!

ப. தெய்வேந்திரம் — உடுப்பிட்டி

0 யாழ்ப்பாணம் வேலிகளால் கண்ட நன்மை என்ன?

ஃ கண்மண் தெரியாது குடித்துவிட்டு ''சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு'' என்று ஆடுபவர், வேலியைப் பிடித்து வீடுபோய்ச் சேரலாமல்லவா?

க. பரமு — மாதகல்

0 மேல்நாட்டவரிடம் இன்றும் நிறத்துவேஷம் இருக்கிறதா?

ஃ பிறரைப் பார்ப்பானேன்? ''மாப்பிள்ளை கறுப்பா? சிவப்பா? பெண்பிள்ளை கறுப்பா? சிவப்பா'' என்ற கேள்விகள் எம்மிடமே, இன்னும் இருக்கிறதே!

ம. வரதன் — மானிப்பாய்

0 எதிலும் நிறைவு காண முடியுமா?

ஃ அழகற்ற குயிலிடம் இனிமையான குரல்; எழிலான மயிலிடம் வெறுப்பூட்டும் குரல்!

கு. மணிசேகரம் — அச்சுவேலி

0 ஜனரஞ்சகம் என்றால் என்ன?

ஃ ஜனத்தின் அகத்தில் பதிந்தவற்றையே ஜனரஞ்சகம் என்கிறோம்.

சனகசர்மா — வரணி

0 நீர் சாதித்தது என்ன?

ஃ சத்தான சிந்தனைகளை சித்திரமாக்க முயன்றேன்.

தேவராசா — கரவெட்டி

0 பொல்லாததும் நல்லதும் எது?

ஃ கொட்டும் தேனீக்களின் கூட்டுக்குள் தான் தித்திக்கும் தேன் இருக்கிறது.

சிவகுமார் — கரவெட்டி

0 பெண் குழந்தை பிறந்தால்

ஃ பெண்ணைத் தெய்வமாய் எண்ணும் இனம், தனக்குப் பெண் குழந்தை பிறந்தால் மட்டும் மற்றவர்களிற்குச் சொல்லத் தயங்குகிறது

0 உமது வாழ்க்கையில் இழந்துவிட்டது எதனை யாவது பற்றி இன்று கவலைப்படுகிறீரா?

ஃ ஓம்! வைரமுத்துவின் 'அரிச்சந்திரா' நாடகத்தில் 'பிறந்தது மண்மேல்' என்று பாடி நடிக்கும் காட்சியை காணும் வாய்ப்புக்கிட்டாது போனதை எண்ணி இன்றும் வருந்துகிறேன்

0 சூரியன் எப்போது சிரிக்கின்றான்?

ஃ கைக்கடிகாரம் கட்டியவன் கந்தோரில் தூங்கும் போது.

சி. பரம் — துன்னாலை

0 உமக்கு இனிய சங்கீதம் எது?

ஃ விலங்கு ஒடியும் ஓசை.

0 உமக்கு சினிமாப் பாட்டில் பிடித்த பொன்னான வரிகள் என்ன?

ஃ '' பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் பல பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா! ''

சி. குருபரன் — கரவெட்டி

0 உயர்திணைக்கும் அஃறிணைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ஃ உயர்திணையாகிய மனிதன் தனக்காகப் பதுக்குகிறான்; அஃறிணையாகிய எறும்பு தமக்காகப் பதுக்குகிறது.

வி. சண்முகம் — புலோலி

0 விடுதலைப் போராளி பற்றி உமது கருத்து?

ஃ அவன் வாழ்க்கை ஒரு இலட்சியப் பயணம். அதில், தன் காலை இழக்கிறான், நாங்கள் சொந்தக்காலில் நிற்பதற்காக!

சி. சின்னத்தம்பி — பளை

0 ஜனநாயகம் பற்றிச் சிறிது கூறும்?

ஃ ஜனநாயகத்தில் தேர்தல் வரும்; யமனுக்கு 'ஓவர் ரைம்' வேலையும் வரும்!

த காமராசன் — மல்லாகம்

0 தாலி என்பது என்ன?

ஃ பல பெண்களுக்கு அடிமை விலங்காகிறது; சில பெண்களிற்கு சுதந்திரக் கொடியாகிறது!

கந்தசாமி — மல்லாகம்

0 தமிழன் பண்பாடு என்ன?

ஃ நான் என்ற அகந்தை அழித்து, யாம் என்று அழைக்கும் பண்பாடு உள்ளவன் - '' யாமார்க்கும் குடியல்லோம், யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம், யாமறிந்த மொழிகளிலே'' என்று தமிழ்ப் புலவர்கள் பாடியுள்ளார்கள்.



ஒருவர்: கோயிலுக்கை ஒரு சனமும் இல்லை எல்லாம் கோயில் முகப்பில நிற்குதுகளே?

மற்றவர்: அது அடிக்கிற சிதறு தேங்காயைப் பொறுக்கிறதுக்கு.

# மானம்

நாக. பத்மநாதன்

"கழுதை தேய்ந்து ......"
"தேய்ந்து ?"

அதட்டலாய் எழுந்த இக்கேள்வியால் காற்று அசந்தே போய்விட்டது!

யாரோ கூறிய பழமொழியைப் பாடிக்கொண்டு வந்த காற்றுக்கு இந்த எதிர்பாராத கேள்வி திகைப்பைத் தந்தது உண்மையே! அத்துடன்—

கேள்வியை எழுப்பிய கட்டெறும்பும் தலையை நிமிர்த்தியபடி கண்ணெதிரே நின்றது.

கட்டெறும்பும் காற்றும்போல் அல்லாது, துணிவும் திகிலும் போல அவையிரண்டும் காட்சி அளித்தன.

மரத்தின் மேற் கொப்பிலிருந்த காகம் இவற்றைப் பார்த்து "ஆகா" என ரசித்தது! அது சுதந்திரப் பிராணி. தலையை அசைத்துவிட்டு மீண்டும் பார்த்த போது—

எறும்பு எங்கோ விரைந்து விட்டது.

காற்று கனதியோடு போய்க் கொண்டிருந்தது.

"கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்று என நான் பாடியது உண்மை. அது பழமொழி. அதில் என்ன தான் பிழை? எறும்புக்கு ஏன் இந்த ஆத்திரம்? ஆவேசம்?

இவ்விதம் காற்று தன்னைத்தான் கேட்டுக் கொண்ட போதிலும் ஏதோ ஒரு தவறை அதன் உள்மனம் உணர்ந்திற்று.

"இதனை யாரிடம் கேட்டறிவோம்?" திடீரென ஒரு யோசனை தோன்றிற்று.

"கழுதையிடமே கேட்போமே!" இந்த எண்ணத்தோடு அது பறந்தது.

தூரத்தே ஒரு கிராமம். அந்த ஊர்மனையில் ஒரு கழுதை நின்றது. அதன் முதுகில் ஒரு பாரச் சுமை.. எசமான் வாளியில் கொண்டுவந்த கஞ்சியை வைத்தான். அதனைத் தலை குனிந்தபடி கழுதை குடித்தது. அவன் வா என்று கூறிய வழியே அது பின்சென்றது!


காற்று இதனைப் பார்த்தது. ஏளனமே பிறந்தது! கழுதையுடன் கதைக்க அதற்கு மனம் எழவில்லை கட்டெறும்பின் உருவமே அதன் கண்முன் தெரிந்தது.

"கழுதை வேறடா. கட்டெறும்பாகிய நாங்கள் வேறடா! எம்மை எவரும் பிடிக்க முடியாது. வைத்து வளர்க்க முடியாது. அடிமைப்படுத்தவும் முடியாது!"

எறும்பின் பலத்த குரல் அது! மின்னலின் பின் எழும் முழக்கம் போல் அது இருந்தது. காற்று ஏற்கனவே தெளிந்து கொண்டது.

"கழுதை தேய்ந்தாலும் கட்டெறும்பு ஆகாது." என்ற உள்ளக் களிப்புடன் அது உயர்ந்து எழுந்தது.

"கழுதையின் மந்த அடிமை நிலை வேறு. கட்டெறும்பின் மழுங்காத தன்மானம் வேறு" என்ற புதிய இசை அது சென்ற வழியே பறந்து கொண்டிருந்தது.



மனைவி:- தேசிக்காய்த்தண்ணீர் கரைப்பதற்கு சீனி இல்லை!
கணவன்:- சீனி இல்லாவிட்டால் உப்பைப் போட்டு வா!
மனைவி:- உப்புக்கும் எங்கே போவது?



# தவில்மேதை நவில்கிறார்.

தமிழ்நாட்டின் தவில்மேதை வலயப்பட்டி சுப்பிரமணியம். அவர் இந்த வருடம் தமிழிசைச் சங்கத்தின் இசைப் பேரறிஞர்' விருதைப் பெறுகிறார. தவில் வித்துவான் ஒருவருக்கும் ஐம்பது வயது நிரம்பாத ஒருவருக்குமாக இந்த விருதைப் பெறும முதலாவது இசைக் கலைஞர் இவரே "தவிலிற்கு அடிப்படை தமிழே" என்று கூறும் அவர், தவிலும் தமிழும் பற்றிச் சில கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்'

ψ தவிலைப் பொறுத்தவரை அதற்கு ஆதாரமாக விளங்குபவை தமிழ்ச் சொற்கட்டுகள் தான். தா — தீ — தொம் — நம் என்ற ஒலிகள் தான் தவிலுற்கு ஆதாரம் காரைக்குடியில் வாசித்தாலும் சரி, கலிபோர்னியாவில் வாசித்தாலும் சரி தவிலில் வருகிற சத்தம் தமிழ்ச்சத்தம் தான்.


ψ தயிர்ச் சாதத்துக்கு ஊறுகாய் தொட்டுக்கிட்டுச் சாப்பிடற மாதிரித் தான் இன்னிக்குத் தமிழ் இசையை, தமிழ்நாட்டு இசைக் கலைஞர்கள் கச்சேரியில பாடுறாங்க. தமிழ் பாட்டுக்கள் இன்னிக்குத் 'துக்கடா அயிட்டமாகத்' தான் இருக்கு. தமிழிசைச் சங்க கச்சேரிகளிலேயே இந்த நிலைதான்.

ψ தமிழ்ப் பற்று இல்லாமலே தமிழிசை வளர்ந்திடாது. நம்ம ஊர்க்காரங்க பேச்சுல பாதிக்கு மேல ஆங்கிலம் தானே விளையாடுது? யாழ்ப்பாணத் தமிழர்களின் பேச்சிலேயே ஒரு ராகம் இருக்கும். இசைத் தமிழில் தான் அவங்க பேசுவாங்க. அவங்களுக்கு மொழி மேல அவ்வளவு ஆசை. தூய்மையான தமிழை அங்கே தான் கேட்க முடியுது. அங்கே தமிழிசை வளருது.

ψ கர்நாடக மாநிலத்தில் 'கர்நாடகா தினம்'னு நவம்பர் முதல் தேதி கொண்டாடறாங்க. அன்னிக்குக் கன்னடப் பாட்டுக் கச்சேரிகள் மட்டுமே நடத்தற சபாக்களுக்கு அரசே உதவித் தொகை கொடுக்குது. பொங்கல் அன்னிக்குத் 'தமிழிசை தினம்' கொண்டாடினா என்ன? இது கூடத் தமிழனுடைய அரசு செய்யக் கூடாதா?

ψ வெறும் ராகத்தையே எவ்வளவு நாள் இசைச்சுக்கிட்டு இருக்கிறது. ராகத்தோட ஒரு கவிதையைச் சேர்த்துப் பாடும் போது தானே இசையின் சுகமே முழுமையாகிறது! மொழிக்கு இசை தேவையில்லை. ஆனா, இசைக்கு மொழி தேவை. இது என் உறுதியான கருத்து. அதற்காக மற்ற மொழிப் பாடல்களை நான் வெறுக்கறேன்னு நினைக்காதீங்க. இசைன்னா அது எங்கிருந்து வந்தாலும் எனக்கு அமுதம் தான். தமிழ் நாட்டில தமிழிசை இல்லாமப் போயிடக் கூடா தேங்கற ஆதங்கம் தான் எனக்கு.

நன்றி: ஆனந்தவிகடன்.



ஃ ஒருவர்: "வழித்தேங்காயை எடுத்துத் தெருப் பிள்ளையாருக்கு அடித்தது போல" என்ற உவமானத்தை மாற்றவேண்டும்!

மற்றவர்: ஏன்?

ஒருவர்: தேங்காய் பொன்விலை விற்கிறது; யார் வழியில் விட்டு வைப்பார்கள்?

# அன்னிய நாட்டு மோகங்கள்

ஆர். அலெக்ஸ் பரந்தாமன்.

அந்த பிரபலமான வைத்திய சாலையில் மனநோயாளர் பகுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த தந்தை சிவப்பிரகாசத்தையும், தாயார் பாக்கியத்தையும் பார்த்துவிட்டு, பஸ்ஸினில் வீடு திரும்பிக் கொண்டிருந்தாள் மாலதி. பணப்பித்துபிடித்ததனது பெற்றோரை பைத்தியங்களாக மாற்றிவிட்ட அந்தக் கடிதம் அவளது நெஞ்சுச் சட்டைக்குள்ளே இதயத்தோடு பாரமாக அழுத்திக் கொண்டிருந்தது. கசங்கிப்போன அந்த வெளிநாட்டுக் கடிதத்தை மெதுவாக வெளியே எடுத்து விரித்துப் பார்த்தபோது, புவனாவின் அபலைத்தோற்றம் கடிதத்தில் பிரதிவிம்பமாகத் தோன்றுவது போல் இருந்தது மாலதிக்கு.

பஸ்ஸின் ஓட்டத்தோடு கசப்பான அனுபவ நினைவுகளும் ஓடத்தொடங்கின.

**சிறுகதை:-**

பொழுதுவிடிந்து வெகுநேரமாகிவிட்டது வீட்டுமுற்றத்தில் சடைத்து வளர்ந்துநின்ற மல்லிகைக் கொடியில் இருந்து வீசிவரும் இனியதொரு நறுமணம் அந்த வீடெங்கிலும் பரவி அங்குள்ளோரின் இதயத்தை, இன்பலயத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தது.

அன்று சிவப்பிரகாசத்தின் மூத்தமகள் புவனாவை திருமணம் செய்து வைப்பதற்காக வெளிநாடு ஒன்றிற்கு அனுப்புவதற்கு, அவளின் உறவினர்கள் பலரும் அங்கே கூடியிருந்தார்கள். அங்குள்ளோரின் மனம் ஒருவித மகிழ்ச்சியிலும், இன்பத்திலும் ஆழ்ந்து கொண்டிருந்த அதேவேளையில் புவனாவின் மனம் மட்டும் நொந்துபோன உணர்வுகளுடன், கொந்தளிக்க முற்படும் தனதுகோப உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு மௌனமாக தனது அறையினுள் அமர்ந்திருந்தாள் ரோஜாமலர் போன்ற அவள் அழகிய வதனத்தில், அந்தகாரம் வேறு சூழ்ந்துகொண்டு அவள் முக மலர்ச்சியை மேலும் களங்கப்படுத்திக்கொண்டிருந்தன.

இத்தனைக்கும் மேலாக பரமநாதன் கூறிய வார்த்தைகள் அவளது இதயத்தில் மீண்டும் வந்து மோதிய வண்ணம் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

'புவனா நான் இந்த சமூக அமைப்பில் சாதாரண ஒரு கூலிக்காரன் வசதி குறைந்தவன் இந்த சமூகத்தின் பலவீனம் எப்படிப்பட்டதென்டு எனக்குத்தெரியும். மனித வாழ்க்கைக்கு பணம் மட்டுமே பிரதானம் என்ற கொள்கையோடு வாழும், உன்னுடைய பெற்றோர் எமது காதலை அங்கீகரிப்பார்கள் என்று எனக்கு நம்பிக்கையில்லை. நான் அரிசி 'மில்' லில் மூடை தூக்கும் ஒரு நாட்கூலி என்று தெரிந்தும், நீயாகவே என்னிடம் வந்து உனது காதலை வெளிப்படுத்தினாய். உன் அன்பை நினைத்து நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆனால்! அதேசமயம் வாழ்க்கையிலை நாம் இருவரும் ஒன்றுசேருவோமா...? என்பது என்னைப் பொறுத்த வரையில் அது ஒரு பெரும் கேள்விக் குறியே...'

புவனாவால் அழுகையை அடக்க முடியவில்லை தலையணை அவளது கண்ணீரை உறிஞ்சி எடுத்துக் கொண்டிருந்தது. வசதி குறைந்த பரமநாதனை வாழ்க்கைத் துணைவனாக ஏற்றுக்கொள்ள, சுயநலம் உள்ள அவளது உற்றம், சுற்றம், சூழல் எதுவும் இடம் கொடுக்க முன்வரவில்லை.

கடந்து போன கால நினைவுகள் மனத்திரையில் சதிராட ஆரம்பிக்கின்றன. அந்த ஊரில் இருந்து ஆறுவருடத்திற்கு முன் அன்னிய நாடொன்றிற்கு அகதியாக சென்ற கனகசுந்தரம் என்பவனுக்கும், புவனாவிற்கும் கனடா நாட்டில் திருமணம் செய்துவைக்க புவனாவின் பெற்றோர் முயற்சி செய்துகொண்டிருந்தபோது அவள் தனக்கும் பரமநாதனுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த காதலை ஏதோ ஒரு துணிவில் தாய் தந்தையிடம் எடுத்துக்கூறினாள்.

அவள் கூறிய அடுத்த நிமிடமே அந்த வீடு ஒருகணம் இரண்டு பட்டுக் கொண்டது. ''அடியே. சீ நாயே! என்னடி சொன்னாய்...? நீ காதலிக்கிறதுக்கு போயும், போயும் 'மில்' லிலை மூட்டை தூக்கிறவன் தானா உனக்கு கிடைச்சான்...! ஒரு கூலிக்காரனை உனக்கு கட்டி வைச்சா, உனக்கு கீழை மூண்டு தங்கச்சிமார் இருக்கிறாளவையே அவளவைக்கு எப்படிப்பட்ட மாப்பிளைமாரை நாங்கள் தேடி முடிச்சு வைக்கிறது...?''

பத்திரகாளி கோலத்தில் நின்றவாறே தாய் பாக்கியம் கூறுகின்றாள். ''இதோ பார் பிள்ளை, ஒரு குடும்பத்திலை மூத்தபெண்பிள்ளைக்கு கௌரவமான நல்லதொரு மாப்பிளை கிடைச்சால்தான், அதைப் பார்த்து மற்றைய பொம்புளைப் பிள்ளையளுக்கும், அதே சொந்த வழியில் நல்லதொரு மாப்பிளையை எடுக்க முடியும். உன்னைக் கூலிக்காரன் ஒருவனுக்குக் கட்டிக்குடுத்தால், உனது தங்கச்சிமாருக்கு உத்தி

யோக மாப்பிளை எடுக்கிறது மிகக்கஸ்டம். அதோடை கனகசுந்தரம் இப்ப கனடாவிலை பணம், பொருள் பண்டம் என்றெல்லாம் நிறையச் சொத்துக்களைத் தேடி வைச்சிருக்கிறான். அவனுக்கு உன்னைக் கட்டிக் குடுத்தால், நீ அங்கை சுகமாக சந்தோஷமாக வாழலாம் தானே…''

அவளின் மனதை மாற்றுவதற்காக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல், மிகப் பக்குவமாக கூறுகிறார் தந்தை சிவப்பிரகாசம்.

'' அப்பா! ஓரளவு வசதியுள்ள நாங்கள் அன்னிய நாட்டு மாப்பிளைக்கு அள்ளிக் குடுக்கிற சீதனத்தை, வெளிநாட்டுக்குப் போக வசதியில்லாமல் பிறந்த மண்ணையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் பரமநாதனைப் போன்ற இளைஞர்களுக்கு அள்ளிக் குடுத்தால், நாங்கள் என்ன குறைஞ்சா போய்விடுவம்..?''

''அதுக்கில்லைப் பிள்ளை.. பணம் பணத்தோடை தான் சேரவேண்டும். இந்தப் படிப்பறிவில்லாத கூலிக்காரப் பரதேசியளுக்கு சீதனம் என்பது ஒண்டு தேவைதானா…! அப்படியே அதொண்டைக் குடுத்தாலும் அதைக் காலம் காலமாக வைச்சு காப்பாற்ற அதுகளுக்கு ஒண்டும் தெரியாது''

பரமநாதனையே பொதுப்படையாக கூலிக்காரப் பரதேசி என்று தனது தந்தை கூறியதைக் கேட்ட புவனாவுக்கு, இதயத்தில் யாரோ நெருப்பினால் சுட்டது போன்ற ஒரு வலி ஏற்பட ஆத்திரத்துடன் தந்தையின் பக்கம் திரும்பினாள். '' அப்பா! நான் காதலிக்கிற பரமநாதன் ஒண்டும் அப்படிப் பரதேசிக் கூட்டமல்ல. எமது பிறந்த மண்ணிலே இத்தனை பிரச்சனைகளும் நடக்கும்போது முகம்கொடுக்கப் பயந்து ஓடித் தப்பிய அந்த கனகசுந்தரம் போன்ற ஆட்கள்தான் நெஞ்சிலே துணிவில்லாத ஒரு பரதேசிப் பயலுகள்''.

தாலிகட்டப்போறவன். அதுவும் தன் எதிர்காலமருமகனையே ஒரு பரதேசிப் பயல் என்று புவனா கூறியதும், சிவப்பிரகாசத்திற்கு கோபம் வந்துவிட்டது.

'என்னடி சொன்னாய்…? என்றவாறே புவனாவை அடிப்பதற்குக்கையை ஓங்கிக்கொண்டு வந்த சிவப்பிரகாசத்தை ஓடிப்போய் தடுத்துக்கொண்டாள் புவனாவின் தங்கை மாலதி.

'' பார் கேடுகெட்ட கழுதையை வலியவாற சீதேவியை மூதேவிமாதிரி முன்னுக்கு நிண்டு வேண்டாம் எண்டு சொல்லித் தள்ளுது. நீ என்னசொன்னாலும்… எப்படித்தான் அடம் பிடித்தாலும், கனகசுந்தரம் தான் உனக்கு தாலிகட்டப் போறவன். அதுவும் இஞ்சையில்லை. கனடாவிலை எல்லாத்திற்கும் நீ ஆயத்தமாக இரு…'' என்று கூறிவிட்டு ஆத்திரத்துடன் வெளியேறினார் சிவப்பிரகாசம்.

புவனாவால் எதுவும் பேச முடியவில்லை. மனித உள்ளங்களின் மனப்பொருத்தங்களை அகற்றிவிட்டு, பணப்பெருக்கத்திற்கு வழிதேடும் தனது பெற்றோரின் மனச்சாட்சிக்கு விரோதமான செயல்களினால், ஆத்திரப்பட்டவள் வாயிருந்தும் ஊமையாக, வார்த்தைகளை… உணர்ச்சிகளை… மனதுக்குள் புதைத்துக் கொண்டு தனக்குள்ளேயே அழுதுகொண்டிருந்தாள்

அவளின் மன உணர்ச்சிகளைப் புரிந்துகொண்ட தங்கை மாலதி அவளுக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறி அவளைத் தேற்றிக் கொண்டிருந்தாள்.

'' அழாதை அக்கா. இன்னார்க்கு இன்னார் தான் என்று இறைவன் விதிஎனும் நேர்கோட்டில் எழுதி வைத்துவிட்டால் அதை யாராலும் மாற்றமுடியாது…''

'' மாலதி…'' தங்கையைக் கட்டி அணைத்தவாறே அழ ஆரம்பித்தாள் புவனா.

'' மாலதி… கனகசுந்தரம்தான் எனது சணவன் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள மூடியாமல் இருக்குது. கனகசுந்தரம் எப்படிப்பட்ட ஆள்…? எண்டு எனக்குக் கொஞ்சம்கூடத் தெரியாது அவன் தாலி கட்டுறதுக்கு நான் கனடாபோய் கழுத்தை நீட்ட வேணுமாம்''.

மாலதி சிரித்தாள்.

'' வரதட்சணை கொடுக்க முடியாமல் நாலுவேலிக்குள்ளை இருந்து பெருமூச்சுவிட்ட பெண்களுடைய வாழ்க்கைப் பாதையின் ஒரு பகுதி, எப்படி மாறியிருக்கு பார்த்தியா அக்கா…''

அவள் கூறியதன் விபரம் புரியாமல் 'என்ன…?' என்குமாப் போல் அழுத கண்களுடன் தங்கை மாலதியை ஏறிட்டு நோக்கினாள் புவனா.

'' வரதட்சணை, சீதனம் போன்றவற்றை கொடுக்க முடியாமல் பெருமூச்சுவிட்ட நமது பெண்ணினம், இப்போது பெற்றவர்கள் விரும்பும் பணத்திற்காக கடலட்டை ஏற்றுமதி செய்வது போல அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டு, அங்குள்ள அகதி மாப்பிளைகளுக்கு மனைவியாக்கப்படுகிறார்கள். இப்படியே நம்முடைய கலாச்சாரம் பண்பாடு எல்லாம் போற போக்கைப் பார்த்தால், அங்கை அன்னிய நாட்டிலை பிள்ளையொண்டு பிறந்தவுடன் இஞ்சை முப்பத்தொண்டு கொண்டாடுவதற்கு, பிறந்த பிள்ளையை அங்கையிருந்து 'பார்சல்' செய்து அனுப்ப வேண்டிய காலகட்டமும் வரும்…'' என்று கூறிவிட்டு மாலதி சிரிக்க அவளது சிரிப்பில் கவலையை மறந்த

வளாக புவனாவும் வாய்விட்டுச் சிரித்தாள்.

வெளியே ஆரவாரம் கேட்கிறது அழுத கண்களுடன் வீங்கிய முகமுமாய் அறையின் ஜன்னல் சீலையை மெதுவாக விலக்கிக்கொண்டு, பார்வையை வெளியே மேய விடுகிறாள் புவனா. வீட்டின் முன்விறாந்தையில் போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியில் கனகசுந்தரத்தின் பெற்றோர், சகோதரங்கள், உறவினர்கள் யாவரும் சிவப்பிரகாசத்தோடு என்னவோ சொல்லி அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

அங்குள்ள எல்லோர் முகங்களையும் கண்களால் ஊடுருவிப் பார்க்கின்றாள் புவனா. அவர்கள் யாவரும் மகிழ்ச்சிப் பெருக்கால், இன்புற்று இருப்பதைக் கண்டதும் புவனாவுக்கு தனது கையாலாகாத்தனத்தை எண்ணி மனதுக்குள் வேதனைப்பட்டாள்.

வெளியில் வெய்யிலின் அகோரம் படிப்படியாக அதிகரிக்கிறது. உடற்புழுக்கம் தாங்க முடியாமல் மின்விசிறியை சுழலவிடுகிறாள். உடற்புழுக்கம் தணிந்து கொண்டாலும், மனதில் உள்ள புழுக்கம் தணியாத நிலையில் தங்கை மாலதி கூறியதை திரும்பவும் நினைத்துப் பார்க்கிறாள்.

'இன்னார்க்கு இன்னார் தான் என்று இறைவன் விதி எனும் நேர்கோட்டில் எழுதி வைத்துவிட்டால், அதை யாராலும் மாற்றமுடியாது'

வசதி குறைந்து போனதால் வாழ்க்கையில் முழுமையாக எந்த ஒரு இன்பத்தையும் அனுபவிக்கமுடியாதவனாக, வாழ்ந்து கொண்டிருக்கும் பரமநாதனின் முகத்தோற்றம் அவள் கண்களின் முன்னே வந்து நின்று நர்த்தனமாடுகிறது.

அன்னிய இராணுவத்தின் கைகளில் அகப்பட்டும் அடி, உதைகள் பல வாங்கியும் அஞ்சாத மன உறுதியோடு திடகாத்திரமான உடல் வாகுடன் பிறந்த மண்ணில் தனது பாதங்களை ஆழமாக பதித்து நடக்குப் பரமநாதனது மனோதைரியத்தை நினைத்து பூரித்துப் போவாள் புவனா.

இப்போது எல்லாவற்றையும் இழந்த நிலையில், அறிமுகமில்லாத... குணம் குறிதெரியாத... ஒருவனுக்கு அன்னிய தேசத்தில் போய், கழுத்தை நீட்டப் போவதை நினைக்க புவனாவுக்கு திரும்பத் திரும்ப ஓ... வென்று அழவேண்டும் போல் இருந்தது.

நேரம் பிற்பகல் ஆகின்றது. போலி உள்ளத்துடன் நீலிக் கண்ணீர் வடிக்கும் கனகசுந்தரத்தின் பெற்றோர், உறவினர்களையும், பணம், பொருள், பண்டத்திற்காக அன்னிய நாட்டிற்கு விலைபேசி அனுப்புகின்ற தனது பெற்றோர்களையும் வேண்டா வெறுப்புடன் நோக்கியவாறே, பிறந்த மண்ணில் தவழ்ந்த சுகத்தையும் பிரியமான அன்புக் காதலன் பரமநாதனின் நினைவுகளையும் மனதில் இருந்து பிரிக்க முடியாத நிலையினில், சுற்றியிருந்தவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு அவள் கனடாவுக்கு புறப்பட்டு விட்டாள்.

"எவ்விடம் தங்கச்சி போறியள்?"

பஸ்கண்டக்டரின் குரலால் சங்கிலித் தொடரான அர்த்த நினைவுகள் அறுபட்டு விழுந்து கொள்ள, போகுமிடத்தையும் அதற்குரிய பணத்தையும் கொடுத்து, டிக்கற்றைப் பெற்றுக்கொண்டபின் கையிலே கிடக்கும் புவனாவின் அந்தக் கடிதத்தை மீண்டும் ஒருதடவை படிக்கத் தொடங்கினாள் மாலதி.

அன்புள்ள பெற்றோருக்கு...!

பிறந்த மண்ணில் பெருமையோடு வாழ்ந்த என்னைப் பணத்துக்காக ஆசைப்பட்டு இப்போ படுகுழியில் தள்ளிவிட்டீர்கள். வெளிநாட்டு மாப்பிளை என்டதும் ஏதோ அவர்களிடம் பணம் குவிந்திருக்கிறதென்ற நினைப்பு உங்களுக்கு. ஒரு சிலரிடம் அப்படி இருக்கலாம். ஆனால், அகதி என்ற பட்டத்தோடு அசிங்கமாக வாழும் உங்கள் மருமகன் கனகசுந்தரத்திற்கு, கழுத்தை நீட்டியதைவிட, உங்களால் கூலிக்காரன் என வர்ணிக்கப்பட்ட பரமநாதனுடன் சேர்ந்து குடிசையில் கஞ்சிகுடித்து வாழும் அந்த எளிமையான வாழ்க்கை எவ்வளவோ மேலானது.

கனகசுந்தரத்திற்கு கழுத்தை நீட்டிய மூன்றாம் நாளே அவருக்கும் இங்குள்ள ஒரு வெள்ளைக்கார பெண்மணிக்கும் ஏற்கனவே திருமணம் முடிந்து வெள்ளை நிறத்தோலிலான ஒரு குழந்தையும் உண்டு என்பதை அறிந்து கொண்டேன். பணத்திற்காக எனது வாழ்க்கையைக் கெடுத்தமாதிரி எனது தங்கைகள் மாலதி, கல்பனா, அகிலா ஆகியோருடைய வாழ்க்கையையும் கெடுத்து விடவேண்டாம். கூலிக்காரனாக இருந்தாலும் பிறந்த மண்ணிலேயே நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கவும்.

இப்படிக்கு

உங்களை நம்பிக்கெட்ட

புவனா

அக்காள் புவனாவுக்கு ஏற்பட்ட நிலைமையை நினைத்து, தான் இருப்பது பஸ் என்பதனையும் மறந்து, குமுறிக் குமுறி அழத் தொடங்கினாள் மாலதி.

(யாவும் கற்பனை)

# செய்தி சொன்னதும் பல்லி சொன்னதும்...

**செய்தி:** விமானம்வட்டமிட கிளிநொச்சியில் பேரணி.

**பல்லி:** ''பேரணிக்கு வெய்யில் படாமல் ஓடி ஓடிக் குடை பிடித்திருக்கிறது விமானம்'' என்கிறார் மெயில்வாகனத்தார்.

**செய்தி:** வடக்கில் மனநோயாளிகளுக்கான மின் அதிர்ச்சிச் சிகிச்சை பாதிப்பு.

**பல்லி:** ''மனநோயாளிகளுக்கு சிகிச்சை செய்ய விடாது குந்தகம் பண்ணுகிறவனுக்கு பழுத்த பைத்தியம்'' என்கிறார் சின்னக்குட்டி அண்ணர்.

**செய்தி** கப்பலில் அனுப்பப்படும் உணவு 6,000 மெற்றிக் தொன்னாகக் குறைப்பு.

**பல்லி:** ''புத்தமதத்தினரின் ஜீவகாருண்யம் கப்பலேறிவிட்டது'' என்கிறார் சிறீமான் பொதுசனம்.

**செய்தி:** பிலிப்பைன்சில் குமுறும் எரிமலைக்கு இதுவரை 110 பேர் பலி.

**பல்லி:** ''ப்பூ! உதென்ன தொகை? கொக்கட்டிச்சோலையில் நாங்கள் இதற்கும் மேலாக பலியெடுத்திருக்கிறோமே!'' என்கிறார் ஒரு சிறீலங்கா ராணுவத்தார்.

**செய்தி:** 'கரப்பந்தாட்டம்' தேசிய விளையாட்டாக இலங்கையில் பிரகடனம்.

**பல்லி:** ''இல்லை! தமிழர் தலைகளைப் பந்தாடுவதுதான் எமது தேசிய விளையாட்டு'' என்கிறார் ஒரு காவி தரித்த துறவி.

---

**கணவன்:** அன்னியநாடு போன மகன் கடிதம் போடுகிறானில்லையே!

**மனைவி:** பாவம் பிள்ளை அங்கேயும் தாள் தட்டுப்பாடு போலை!

---

## கொடிய மிருகம்

அமெரிக்காவில் ஒரு மிருகக் காட்சிச்சாலை உண்டு. வரிசை வரிசையாகக் கூண்டுகள், விதம் விதமான மிருகங்கள். அவை எல்லாவற்றிலுமே வித்தியாசமானது, நாம் நுழைந்ததுமே முதன் முதலாகக் காணும் கூண்டு தான். அந்தக் கூண்டுக்குள்ளே அடைத்து வைக்கப்பட்டிருப்பது ஒரு நிலைக் கண்ணாடி அதன் மேல் ''இது மிகப் பயங்கரமான மிருகம்'' என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த மிருகம் எது? அதை நாம் நிலைக் கண்ணாடிக்கு நேராக நின்றுதான் பார்க்க வேண்டும்.

---

குறுமணி:-

## வீணா கானம்?

இளைஞன் படியேறும்போது வீணையைக் கவனித்தான். வீட்டின் நடுமண்டபத்தில் இருந்தது. வளைவு, நெளிவு, 'வானீஸ்' பூச்சு; எழிலார்ந்த வேலைப்பாடு. ஆனாலும் கண்ணாடிச் சிறைக்குள் கைதியா? வீணை! ஸ்தம்பித்து நின்றான். வீட்டுப்பெரியவர் அவனை வரவேற்றார். அவனது நிலையால், அவருக்குள் கர்வம் ''எப்படி இருக்கு?'' என்றார் பெருமிதம் புலப்பட. ஒருகண தாமதம், பின் சொன்னான்: ''மனதுக்கு சங்கடமா இருக்கு!'' பெரியவர் திகைத்தார். ''ஏன்?'' சொன்னான்: ''வீணையின்ர தேவை கண்ணுக்கு விருந்தளிக்கிறதில்லை; காதுக்கு விருந்தளிக்கிறது!''

செ. பொ. சிவனேஷ்

---




குடை; மறதிக்காரர் செய்யும் நன்கொடை.
இலங்கை: ஒப்பந்தங்களின் சமாதிகள் நிறைந்த இடுகாடு.
மாமியார்: மருமகளின் 'ட்றில் மாஸ்ரர்.'

---


**துணுக்கு**

**கணவன்:-** மிதிவெடி நட்டிருக்கினம் அங்கை இங்கை அன்னநடை நடக்கிறதை விடு!

## கரு உருவாகிய விதம்

நான் கருத்தோவியராகக் கடமையாற்றிய கொழும்புத் தமிழ்த் தினசரியின் அடுத்த இதழிற்கான கருத்தோவியத்திற்கு கருப் பொருள் கிடைக்காது குழம்பிக் கொண்டிருந்தேன் அந்த தினசரியில் தொடராக நான் வரைந்து கொண்டிருந்தது 'மைனர் மச்சான்' கருத்தோவியம். அடுத்த ஓவியத்திற்கான கருப்பொருள் தேடி மூளையைக் கசக்கிப் பிழிந்தேன். கிடைக்கவே கிடைக்கவில்லை. அதே நேரம் தெரிந்த ஒருவரை அழைத்துவர ரயில் நிலையமும் செல்லவேண்டி இருந்தது. சென்றேன். ரயில் வருவதற்கு அவகாசம் இருந்தது. எனவே எனது கருப்பொருள் பற்றிய சிந்தனையுடன் ரயில் நிலைய மேடையில் அங்குமிங்கும் நடை போட்டேன். அப்போது ஒரு இளைஞர் என் கண்ணில் பட்டார். கையில் வயலின் கூடு (வயலின் வைக்கும் பெட்டி); அவர் மிடுக்காக நடந்து போய்க் கொண்டிருந்தார். அவரையே சில கணம் உற்றுப் பார்த்தேன். பிறகென்ன? பட்டென்று என் மூளைப் பொறிக்குள் தட்டிவிட்டது கருப்பொருள்.

என் வதிவில்லத்திற்கு திரும்பியதும் முதல் வேலையாக அந்தக் கருப்பொருளிற்கு உருப்போட்டேன். 'மைனர் மச்சான்' அடுத்த கருத்தோவியம் உருவாகியது. — அது இவ்வாறு தான்: மைனர் மச்சானின் அழுக்குத் துணிகள் குவிந்துவிட்டன. சலவை நிலையத்திற்கு அவற்றை எடுத்துச் செல்வதற்கோ அவரிற்கு மிகக் கூச்சம். அவருடைய புத்தியில் தான் பெண் சபலமாயிற்றே! தெருவிலே அவர் நடந்து போகும் போது பெண்கள் மனதில் அவருடைய தரம் குறைந்து போகுமே! என்ன செய்வது? மைனர் மச்சானிற்கு சடுதியாய் ஒரு ஆலோசனை தோன்றுகிறது. எடுத்தார் வயலின் கூட்டை அழுக்குத் துணிகளை எல்லாம் அதனுள் போட்டு பூட்டினார். அதனைக் கையில் பிடித்துக் கொண்டு சலவை நிலையம் நோக்கி மிடுக்காக நடந்து செல்கிறார்.



"சீவகாருண்யமுள்ள ஷெல்கள் பனை, தென்னைகளில் 'கம்உதாவ' செய்யுது."

"அதென்ன அது?"

"பனை தென்னைகளில் பொந்துகள் செய்து கிளிகளைக் குடியிருக்க வைக்குது."

அதிமதுரம்.

## மடமையைக் கொளுத்துவோம்

"மாதர்தம்மை இழிவுசெய்யும்
மடமையைக் கொழுத்துவோம்"

— பாரதியின் வாசகம்

கொள்கையாய் அதனை வரித்துக்கொண்ட வாசகர்களே! 'பெண்விடுதலை' சம்பந்தமான உங்கள் கருத்துக்கள் என்ன? எமக்கு எழுதுங்கள்.

உங்கள் கருத்துக்கள் முழுத்தாளின் (புல்ஸ்காப்) ஒருபக்கத்திற்கு மேற்படாது அமையட்டும். ஆரோக்கியமான படைப்புகள் அனைத்தும் 'சிரித்திரன்' இதழ்களில் இடம்பெறும். மிகச் சிறந்த படைப்பிற்கு 'மில்க்வைற் தொழிலதிபரால்' 100/- சன்மானம் வழங்கப்படும்.

— ஆசிரியர்

## சவாரித் தம்பர்

சவாரித் தம்பரும் சின்னக்குட்டியும் பேருந்து நிலையத்தில் நின்றனர். நீண்ட நேரமாக ஒரு பெண்ணும் காத்து நின்றாள். அவளிடம் ஏதோ தவிப்பு.

கறுப்புக் கண்ணாடியும், மேலைத் தேயப் பாணி தோற் பையும், நவ நாகரீக உடையலங்காரமுமாய் அவள் தோற்றம். நீண்ட நாளைய கொழும்பு வாசி என்பது புலப்பட்டது. அகதியாய் வந்திருக்க வேண்டும்

மேலும் கீழுமாய் ஒரு முறை நோட்டமிட்ட சின்னக்குட்டி சவாரித்தம்பரின் காதில் முணுமுணுத்தார். "அகதியாய் வந்தாலும் அவர் கதியில் மாற்றமில்லைக் கண்டீரோ!"

சற்று நிமிடங்கள்... அப் பெண் இவர்களை நோக்கி வந்தாள் "அங்கிள்! தாகமா இருக்கு வோட்டர் கிடைக்குமா?"

பக்கத்திலிருந்த கோவில் கிணற்றடிக்கு அழைத்துச் சென்றார் சவாரித் தம்பர். அவர் அள்ளி வார்க்க, ஆவலாதியாய்ப் பருகினாள்.

பருகி முடித்ததும் சொன்னாள்: "ச்சே! யவ்னாவில பைப்பில தண்ணி இல்ல குடிக்கிறதுக்கு பாத்றூமில தண்ணி இல்ல குளிக்கிறதுக்கு."

சடுதியாய்த் தம்பர் கேட்டார்; "அப்ப பிள்ளை குளிச்சுக் கன காலமோ?"

## மூர்த்தி கரம்

யாழ்ப்பாணம் என்ற பெயரைக் கடல் கடந்தும் பதித்தார்கள் நமது தவில் மேதைகள்.

★ இது நிகழ்ந்து பல ஆண்டுகள் முன்னால். தமிழ் நாடெங்கும் மிகப் பிரமாண்டமான சுவரொட்டிகள். அவை பறைசாற்றுகின்றன. "யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தி அவர்களின் தவில்க் கச்சேரி". அங்கு சென்றிருந்த நமது சிறில சிறீ மணி ஐயர் பார்வையிலும் பட்டது நிகழ்ச்சி நிரலை நினைவில் பதித்தார். மனதுள் மிகுந்த ஆவல். குறிப்பிட்ட தினத்தன்று தவறாது பிரசன்னமானார். மேடையில் மூர்த்தி. பார்வையாளர்கள் மத்தியில் சிறிலசிறீமணி ஐயர். கான மழை பொழிந்து தள்ளுகிறது. உச்சக்கட்டத்தில் உணர்ச்சி வசப்பட்டு எழுந்தார் செட்டியார் ஒருவர் பார்வையாளர்கள் மத்தியிலிருந்து மேடையை நோக்கி விரைந்தார். மேடையில் ஏறியவர் தன் கழுத்திலிருந்த பெரிய தங்கச் சங்கிலியைக் கழற்றி மூர்த்தியின் கழுத்தில் போட்டார். ரசிகர்களின் கரவொலி வானைப் பிளந்தது. சிறிலசிறீமணி ஐயரே அதனை இங்கு தெரிவித்தார்.

★ ஒரு தடவை சென்னை மியூசிக் அக்கடமி தவில்க் கச்சேரி ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தது. அதில் அமரர் இணுவையூர் என். ஆர். சின்னராசா அவர்களிற்கு முக்கிய இடம். அவரது பெயரை அறிவித்த அக்கடமியினர் 'யாழ்ப்பாணம்' என்ற அடைமொழியைச் சேர்க்கவில்லை. அதுபற்றி அவர் கோரிக்கை விடுத்தார். ஆனாலும், அவர்கள் 'யாழ்ப்பாணம் சின்னராசா' என்று பெயர் வாசிக்க மறுத்து விட்டனர். அதனைக் கண்டித்த சின்னராசா அவர்கள் அந்தக் கச்சேரியையே புறக்கணித்தார்.


மதுமாமா:- தவறணையில் இருந்து வீட்டுக்கு வேலியளைப் பிடித்துக் கொண்டுதான் போய்ச் சேருவது. இப்ப விறகுக்காக வேலியளைப் பிடுங்கிறாங்களே!



## ரசிகர் திருக்கூட்டம்

ஓர் ஆங்கிலப் படம். மிகவும் திகிலான கட்டம். வில்லனைப் பற்றிய இரகசியங்கள் அடங்கிய ஆவணங்கள், அவனது படுக்கையறையில் உள்ள அலுமாரியில் மிகப் பத்திரமாகப் பூட்டப்பட்டுள்ளன. அவற்றை எடுத்தால் போதும், அவனை அம்பலப்படுத்தி விடலாம். அந்த நோக்கத்துடன் கதாநாயகன் பதுங்கியபடி வருகிறான். இரவு நேரம். வில்லனின் மாளிகையைச் சுற்றியுள்ள கண்காணிப்புக்களை எல்லாம் தந்திரமாக ஏய்த்துக் கொண்டு படுக்கையறையில் நுழைந்து விடுகிறான். வில்லனோ அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறான். கதாநாயகன் பூனை போல் நடந்து சென்று சிறிய 'டோர்ச்' வெளிச்சத்தின் உதவியுடன் சத்தமின்றி அலுமாரியைத் திறந்து நிதானமாகத் தேடுகிறான். தேடுவதிலேயே சில நிமிடங்கள் நகர்கின்றன. ரசிகர்களின் இதயங்களோ 'பக் பக்' கென்று அடித்துக் கொண்டிருக்கின்றன. எல்லோருமே ஆசனங்களின் நுனிக்கு வந்து விட்டார்கள். இந் நிலையில் ஒரு ரசிகர் உணர்ச்சி வசப்பட்டு கத்தினார்; "கெதியா எடப்பா, அவன் முழிக்கப் போறான்!" அது கேட்டு இன்னொரு ரசிகர் இவ்வாறு கத்தினார் "நீ போடுற சத்தத்திலேயே அவன் முழிச்சிடப் போறான். சத்தம் போடாமல் இரப்பா!"

சிவா பொன்னுத்துரை



"பெற்றோல் தட்டுப்பாட்டால் காரிலும் போக முடியவில்லை, வண்டிலிலும் போக முடியவில்லை!"

"ஏன் வண்டிலில் போக முடியவில்லை?"

"புண்ணாக்குக்கும் பெரிய டிமாண்டாச்சே!"

# தன்னாட்சி (சுயநிர்ணய உரிமை)

முட்டையொன்று புறத்தில் மோதிய காற்றின் வேகத்தால் உருண்டு சுழன்றது.

உள்ளே தனித்தனியாக இருந்த மஞ்சட் கருவும் வெண் கருவுக்குமிடையே பலமான வாக்குவாதம் எழுந்து கொண்டது.

நீண்ட நேரமாக நடந்த வாக்குவாதம் தீர்வுகாண முடியாது பெரும்போராக மாறிவிட்டது.

'' திணிவிலும் பருமனிலும் நானே பலமானவன் நானில்லையென்றால் நீ வெறும் நீராகவே இருப்பாய் உனக்கு ஒரு வடிவமே கிடைக்காது '' என்று மஞ்சட் கரு புலம்பியது.

'' வெண் கருவோ சிரித்துக் கொண்டு சொன்னது நீ இல்லாது விட்டாலும் என்னால் வாழ முடியும். ஏனென்றால் நானே உயிர்ப் பொருளாக இருக்கிறேன். உனக்கு ஒரு வடிவத்தைக் கொடுப்பதே நான்தான். உன்னைச்சூழ என்பிரதேசம் நீண்டு கிடப்பதன் நோக்கத்தை நீ புரிந்து கொள்ளவில்லை என்றால் நானொன்றும் செய்ய முடியாது'' என்று வெண் கரு அழுத்தமாகக் கூறியது.

## வளவைவளவன்

இருகருக்களும் ஒருவர் மாறி ஒருவர் சொல்லும் வார்த்தைகளை நிதானமாகக் கேட்டுவிட்டு முட்டையின் புறக்கோது சொன்னது '' நீங்கள் இருவருமே வேறுவேறானவர்கள். உங்களது அமைப்பு, உட்கொண்ட கனிமங்கள், தன்மை எல்லாமே தனித்துவமானது. ஒருவர் ஒருவரின் உரிமையை மதிக்காது அகம்பாவங் கொண்டதனால் தான் உங்களுக்கிடையில் இந்தப் போர் மூண்டிருக்கின்றது. இருவருக்குமே தன்னாட்சி உரிமை உண்டு '' என்றது.

வெளியே வீசிய காற்றின் வேகம் குறைந்த போது முட்டை சுயமாகவே இருந்தது கலக்கமின்றி.

மீண்டும் அரணாக இருந்த கோது கூறியது '' புறச் சக்திகளின் தூண்டல்தான் உங்களை மோதவிட்டு அழிவுப் பாதைக்கு வழி கோலியிருக்கின்றது என்பதை இனியாவது ஒத்துக்கொள்ளுங்கள். எந்தக்காலத்திலுமே நீங்கள் ஒன்றாக முடியாது. அந்த அளவிற்கு உங்கள் இயற்கை அமைப்பும் இரு பிரத்தியேகத் தன்மையோடு இருப்பது புரியவில்லையா? '' என்று ஒரு கேள்வியைக் கேட்டு நிறுத்தியது.

'' எனது தன்னாட்சி உரிமையை நீ ஏற்றுக் கொள்ளாதவரை நான் போராடியே தீரவேண்டும். எனது தனித்துவத்தை நான் காப்பாற்றிக் கொள்வேன் '' என்று ஆணித்தரமாக முடிந்த முடிவாக வெண் கரு விளம்பியது.

மஞ்சட் கரு நன்றாக யோசித்தது. எனக்குப் பெரிய பிரதேசம். செறிவு எல்லாமே அதிகமாகத்தான் இருக்கின்றது. ஆனாலும் என்னை இந்தச் சின்னப்பயல் அசைத்துக் கொண்டே இருக்கிறானே. இவனை அடக்கி விட ஒரு வழியாலுமே முடியவில்லையே என்று வேதனைப்பட்டு உள்ளார்ந்தமாகக் கலங்கியது.

'' நீ அதனுடைய தன்னாட்சியை [சுயநிர்ணயத்தை] ஒத்துக்கொண்டால் அது தன்பாட்டில் இருந்துவிடும் நீ கலங்காமல் இருக்கலாம் '' என்று கோது மீண்டும் ஆலோசனை கூறியது.

நீண்ட நேரமௌனத்தின் பின் மஞ்சட் கரு வெண் கருவைப் பார்த்துச் சொன்னது.

'' நாம் இருவருமே பலமானவர்கள்தான். எனக்குரியது போலவே உனக்கும் தன்னாட்சி உரிமையும் தன்னாதிக்கமும் உண்டுதான். இருவருமே எமது தனித்துவத்தைப் பேணிக்கொண்டு இருப்போம் '' என்று கூறியது.

வெண் கரு தனது தன்னாட்சியை நிலைநாட்டிய வீரப்பெருமிதத்தோடு அமைதியடைந்தது. தனது தணியாத தாகத்தை நிலை நிறுத்திவிட்ட களிப்பு வெண் கருவிடம் நிறைந்திருந்தது.

## ஆஹாஹா கல்யாணம்!

இளைஞன், முகத்தின் மினுமினுப்பில் குடும்பச் செழிப்பு புலப்பட்டது. கல்யாணத்தரகர் கண்கள் சும்மா கிடக்குமா? உறுத்தியது.

கேட்டார்: '' தம்பி அரசாங்க உத்தியோகமோ? ''

'' ஓம், எக்கவுண்டன் ''

'' அப்ப கைநிறையச் சம்பளம் ''

'' ஓமோம் ''

'' எந்த ஊர் தம்பி? ''

'' வடலியடைப்பு ''

'' வடலியடைப்பில எந்தப் பகுதி? ''

'' கணபதிப்பிள்ளை மணியம் பகுதி ''.

'' அடட! எல்லாம் எங்களுக்கு வேண்டப்பட்ட பகுதிதான் அப்ப உம்மட சாதகக் குறிப்பைத் தாருமன் ''.

'' ஓம், நாளைக்கு வீட்டை வாங்கோ மிஸ்ஸிஸிட்ட வாங்கித் தாறன் ''.

## சொல்லுங்கள் கேட்கிறோம்.

அன்புசால் ஆசிரியருக்கு.

நீண்ட நாட்களுக்குப் பின் சிரித்திரன் வெளி வந்தமை பாராட்டுக்குரியது. இருந்தும் மார்கழி மாதம் வெளிவராமையால் எனக்கு மனதில் ஒருவித ஏக்கம். அந்த ஏக்கம் தை, மாசி இதழ்களினால் மனம் குளிர்ந்தது. நீங்காத நினைவுகள், மகுடி கேள்விபதில், பதுங்கல், சிரிகதை, முத்திரை பதித்துள்ள வைரங்கள். சிரித்திரன் தொடர்ந்து வீறுநடை போட என் இதயத்தில் எழும் இதமான நன்றிப் பெருக்குகள்.

சிரித்திரன் அபிமானி
நாகமணி மகேந்திரலிங்கம்,
சங்கானை.

அன்பிற்கினிய ஆசிரியருக்கு,

நகை (28), சுவை (2) (தை, மாசி/91) சிரித்திரன் இதழ் படித்தேன். எல்லா அம்சங்களும், நன்றாக இருந்தன. குறிப்பாக, காலத்தின் தேவை யறிந்து யதார்த்த பூர்வமான கருத்துக்களையே, என்றும் பிரதிபலித்து, பளிச்சிடும் நிலைக்கண்ணாடி (பயிர், உயிர் வளர்ப்போம் தலையங்கத்தில்) வழமை போல் மிகவும் நன்றாக இருந்தது. மகுடியாரின் பதில்களும் நன்றாக இருந்தது. ஆழ்ந்து ரசித்தேன். தனக்கென்று ஒருதனியான பாணியில், தவறாது நடை போடும், சிரித்திரனே, என்றும்வாழி!

அன்புடன்,
செல்வி N. தம்பிஐயா,
இணுவில் மேற்கு.

மதிப்புக்குரிய சிரித்திரன் ஆசிரியர் அவர்கட்கு.

சிரித்திரனை திரும்பவும் கண்டபோது நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். பிதுங்கும் விழிகளைக் குலுங்க வைக்க சிரித்திரன் வந்துவிட்டானே! வாழ்க சிரித்திரன்.

மீசாலை செல்வி

"பங்கருக்குள்ளை பயத்தோடையா இருந்தீங்க."

"இல்லை, இல்லை. பங்கருக்குள்ளைதான் என்னுடைய மிஸ்ஸிஸ்ஸின்ரை பேத்டே கொண்டாடினாங்கள்."

அதிமதுரம்

## சிரித்திரனின் சரித்திரம்

மாதமொரு இதழ் விரித்து
நகையவிள
மாமனிதன் குரலங்கே
கூவியெள
மாதவளின் துணைக்கரத்தால்
தூசியெள
மண்மைந்தர் மானுடமாய்
பிறந்தெளுவார்.
வேதமென வாக்கியங்கள்
விளக்கமுற
வேங்கையென கொள்கையங்கே
சிறப்புமுற
சாதனைகள் செய்த கரம்
ஓய்வுமுற
சரித்திரத்தில் சிரித்திரனார்
சிறந்திருப்பார்.

ஆ. க. செல்வநாயகம்.

வாசகர்களே,

உங்கள் கேள்விகளுக்கு
மகுடி பதில்கள்

உங்கள் கேள்விகளை விரைவாக எமக்கு அனுப்பி வையுங்கள்.

மகுடி பதில்கள்,
சிரித்திரன்.

550, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

— ஆசிரியர்

இன்றைய

நவ நாகரீக உலகின்

பிரசித்தமான பாதணிகள்

# ★ Bata ★

உங்கள் தெரிவுகளுக்கு

நாடுங்கள்

★

**FRANK EMPORIUM**


SHOES CENTRE


## பிராங் எம்போறியம்

16(38) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

16(38) **Kasthuriar Road,**
**JAFFNA.**

## நீங்காத நினைவுகள்.....





ஸ்ரீதேவி கருமாரி அம்மன் துணை

குடாநாட்டின் பிரசித்திபெற்ற

மோட்டார், இயந்திர உதிரிப்பாகங்கள்

விற்பனையாளர்கள்

# கருமாரி மோட்டார் கொம்பனி

இறக்குமதியாளர்களும்,

விநியோகஸ்தர்களும்

281, J/S, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24792

## நூல் அகம்

### காணி உறுதி

இளையவன் சிந்தனைகள் சமூகத்தை முழுமை யாக அநுபவித்து ஆக்கப்பட்டவை. கதைகளிலே உலவும் பாத்திரங்கள் அனைத்திலும் காலத்தின் தழும்புகள் காணப்படுகின்றன.

'முயற்சி' யில் தொடங்கி 'காணி உறுதி' வரை யில் இளையவனின் இதயத்துடிப்புகள் இழையோடி நிற்கின்றன. இவற்றில் எந்தக்கதை கற்பனைக்கதை யாக இருக்குமென்று கண்டுபிடிக்க முயற்சித்த யான் தோல்வி கண்டேன்.

எமது குடும்பங்களின் பிம்பங்கள் தெரிகின்றன, எமது அயலவர்களின் அசைவுகளும் ஆரவாரங்களும் நிழலாடுகின்றன, எமது கிராமங்களின் புழுதிக் குணங்கள் புலப்படுகின்றன. இன்னும், எமது சமூ கத்தின் சாக்கடைகளும் சச்சரவுகளும் படைக்கப் படும் சரித்திரங்களும் காட்சிகளாகக் காட்டப்பட் டுள்ளன. இவையாவும் இன்றைய மக்களிற்காக மட்டு மன்று, எதிர்காலச் சந்ததிக்கும் தேவையான வர லாற்று உணர்த்தல்கள்; காகிதக்கல்வெட்டுக்கள்.

தமிழீழத்தின் எல்லைகளைத் தாண்டியும், தமி ழீழத்தின் மண்ணிலும் தோன்றும் பாத்திரங்கள் மூலம் இளையவனின் பரந்துபட்ட அநுபவப் பதிவு களும், தேடல்களும், தெரிவுகளும் தெளிவாகின்றன. தான் கண்டு, கேட்டு, உணர்ந்தவற்றிற்கே கதை வடிவம் கொடுத்துள்ளார்.

தொடர்பியல் ஊடகம் ஒன்று தன்பணியில் முழுமையாகக் கொடுக்கக்கூடிய பங்களிப்பை இப் படைப்புகளின் மூலம் இளையவன் செய்துள்ளார்.

நாவண்ணன்



மரக்காலை முதலாளி:-

இந்தாரும் பொன்முடிச்சு; மரம் நாட்டுவிழா விற்கு என் வாழ்த்துக்கள்.

## குறிப்பூக்கள்!

### வாசமுள்ள பூப்பறிப்போம்

நான் கொழும்பு வை. எம். சி. ஏ. இல் தங்கி யிருந்த காலம் அருகில் உள்ள மாலுமிகள் தங்கு மிடத்தில் ஒரு ஓவியக் கண்காட்சி நடைபெற்றது. உள்ளே போனால், ஒரு பூங்காவின் மத்தியிலே நிற் கிற பிரமை தான் ஏற்பட்டது அத்தனையும் விதம் விதமான பூக்களின் ஓவியங்கள். இதில் பிரமிப்பு என்னவென்றால், அவற்றில் ஒன்று தானும் தூரிகை யால் வரையப்படவில்லை. வர்ணம் எடுக்கும் கத்தி யால் மட்டுமே வரையப்பட்டவை.

கப்பலில் வேலை செய்யும் ஒருவரே அத்தகைய பிரமிப்பு ஓவியங்களை வரைந்தவர். அவரிடம் சென்று "பூக்களை மட்டுமே தனிய வரைந்திருக்கிறீர்களே அதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டேன்.

அதற்கு அவர் சொன்னார்: "என் வாழ்க் கையே எப்போதும் வெறுங் கடலிற்கு மத்தியிலேயே கழிந்து விடுகிறது. பூக்களைக் கண்டு களிக்கக் கிடைக் கும் சந்தர்ப்பமே மிக மிக அபூர்வம். அந்த நிலையே பூக்களின் மேல் எனக்குள் ஒரு அங்கா மோகத்தை வளர்த்துவிட்டது. அதன் பிரதிபலிப்பே இவை".

கூடவே அவர் இன்னொன்றையும் சொன்னார்: "எனது கப்பல் துறைமுகங்களைச் சென்றடையும் போது உடனடியாகவே நான் வெளிச் சென்று விதம் விதமான பூக்கள் கொண்ட பைகளை வாங்கி வருவேன். பிறகு அவற்றை ஓவியங்களாக வரை வேன்".

"நீங்கள் இத்தகைய நிலைக்கு வரக் காரணம் என்ன?" என்று நான் கேட்டதற்கு அவர் கூறினார். "தினமும் ஒரு ஓவியத்தை வரைவது என்ற கொள்கையை வரித்துக் கொண்டேன். சில போது அதற்கு நேரம் கிடைக்காது போனால், வர்ணத் தட்டில் வர்ணங்களை இட்டு, தூரிகையால் அவற் றைத் தொட்டுத் துடைத்து விட்டாவது போவேன்".

---

"வெடிக்காத சின்னக் குண்டு ஒன்று கிடக்குதே?"
"இங்க தா. எங்கடை அம்மிக்கு குழவியில்லை".
"யார் இந்தக் குண்டு போடுறவங்கள்?"
"பரீட்சையில குண்டடிச்சவங்கள்".

— ஜோக்கிறட்டீஸ்

# பசுமை வேந்தன்

ஐ. நா. சபையின் யாழ்ப்பாணப் பிரிவும், யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் இணைந்து அண்மையில் நடாத்தின 'உலகச் சூழல் தின விழா'. இந்த நிகழ்வையே பெருமைப் படுத்திய நிகழ்வு, கந்தையா கனகராசா அவர்களிற்கு 'பசுமை வேந்தன்' என்ற பாராட்டுப் பட்டயமும், தங்கப் பதக்கமும் வழங்கியமை.

கந்தையா கனகராசா அவர்களைத் தெரியும்— மில்க்வைற் அதிபர், சிவதர்ம வள்ளல்... இன்னும் எத்தனை எத்தனையோ பெருமைகள், கௌரவங்கள். எழுதப் போனால் அதற்கே இரண்டு பக்கம் போதாது.

இத்தகைய மனிதருக்கு தங்கப் பதக்கம் கிடைத்ததும் தெரியும். நாடறிந்த சங்கதி

உன்னத மனிதருக்கும் தங்கப் பதக்கத்திற்கும் இடையே சாசுவதமாய் உள்ள பேருழைப்பு தெரியுமா? அநேகமாய்த் தெரியாது தங்கப்பதக்கம் கிடைத்தது பற்றி அவரது கருத்துரைகளைப் பெறும் பொருட்டு அவரது இல்லத்திற்குச் சென்றோம்.

மாடிப்படி இறங்கி வந்து வரவேற்றார். பூரித்த முகம் பூரண நிலவாய்ச் சந்தனத் திலகம்.

மாடிக்கு எம்மை அழைத்துச் சென்றார். முதலில் இருப்பது வரவேற்பு மண்டபம் வரவேற்பு மண்டபம் தானா! இல்லை ஏதாவது ஆலயமா! பிரமித்துப் போனோம்.

அங்கிருந்து அடுத்த மண்டபம் இடையில் ஒரு நடை பாதை, சமாந்தர எல்லையாய் அரைச் சுவர். இவ்வாறு ஒரு அரைச்சுவர் என்றால், மிகுதிப் பாகம், சீமேந்தால், இரும்பால் அல்லது மரத்தால் ஏதாவது ஒரு 'கிறில்'. இது சாதாரண மனிதர்களிடம் சர்வசாதாரணம். ஆனால் இங்கோ 'கிறில்' என இருப்பதெல்லாம் பொன் மொழிகளைத் தாங்கிய பதாகைகள். தேசத்தைக் காக்கும் போராளிகளின் அணிவகுப்பைப் போல், தமிழ்ப் பண்பாட்டைக் காக்கும் பொன் மொழிகளின் அணிவகுப்பு.

அவர் சொன்னார்: ''இத்தகைய நறுக்கான வசனங்கள் மூலம் நல்லவற்றை மக்கள் மனதில் பதிய வைக்கப் பாடுபடுகிறோம்''.

அங்கே இவ்விதம் ஒரு பொன் மொழி, 'நல்லவற்றையே செய்யுங்கள்.'


'வீட்டுக்கொரு பசு' என்றொரு பதாகை. ''அம்மா'' என்றொரு ஒலி. எட்டிப் பார்த்தேன். தரையிலே மாட்டுத் தொழுவத்தில், தாய்ப்பசுவுடன் ஒரு கன்றுக்குட்டி.

'வீட்டுக்கொரு மரம்' — அவரது வீட்டைச் சூழவுமே பசுமரங்களின் முற்றுகை.

'சுத்தம் சுகம் தரும்' — தூய்மை! எங்குமே தூய்மை, அவர் அழைத்துச் சென்ற இடமெல்லாம் தூய்மை!

ஊருக்கு உபதேசம் செய்துவிட்டு ஒதுங்காது, தானே பின்பற்றி வழிகாட்டும் முன்னுதாரண மனிதர்.

அவர் அழைத்துச் சென்ற மண்டபத்துள் நுழைந்தோம். சந்தேகமேயில்லை. நிச்சயமாக இது ஆலயம் தான். ஆளுயரத்திலே, அவரது அன்னையும் பிதாவும் நிழற் படங்களில். சொன்னார்: ''மனிதனாகப் பட்டவன் வணங்க வேண்டிய முதல் தெய்வங்களே தாயும் தந்தையும் தான். அவர்கள் உயிருள்ள தெய்வங்கள்''.



**பசுமை வேந்தன்**
க. கனகராசா அவர்கள்
(மில்க்வைற் அதிபர்)

மண்டபத்தைச் சூழவும் பெரியார்களின் படங்கள். ஒரு நான்கடி உயரத்தில் திருவள்ளுவரின் ஓவியம். மற்றவர்கள் யாராவது சொல்வதென்றால் ''திருக்குறளைப் படியுங்கள்'' என்றல்லவோ சொல்வார்கள். அவரோ, ''திருக்குறளின்படி நடவுங்கள்'' என்று மட்டும் தான் சொன்னார்.

அடுத்து அவர் தனது நூல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். நிறைந்து கிடந்தன விதம் விதமான நூல்கள். அனைத்தும் உயரிய தத்துவங்கள்.

வெளியே பார்த்த பொன் மொழிப் பதாகை ஒன்று சட்டென்று மனத் திரையில் விழுந்தது: 'வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்'. இங்கு அவர் கூறியது: "இவை மட்டும் தான் எனது பொக்கிஷம். எனது சந்ததியினருக்காக நான் சேர்த்து வைக்கும் சொத்து".


இன்னும் அங்கு இருந்த பொன்மொழிகளுள் ஒரு சில மணிகளும், அவர் தந்த விளக்கமும்:

நீர்வளம் காப்போம் — "யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பொறுத்தவரை மழையை நம்பித் தான் எல்லாமே. எனவே நாம் நீர்த் தேக்கங்களில் நீரைச் சேமித்துக் கொள்ள வேண்டும்".

மரங்களைத் தறிக்காதீர் — "மர வளம் இல்லாமல் மழை வளம் இல்லை. விவசாயம் இல்லை. தேசத்தில் செழிப்பும் இல்லை".

செம் மண் வளம் காப்போம் — "யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை செம் மண் பிரதேசம் மிகக் குறுகியது. ஆனால் எமது ஜீவாதாரமான விவசாயத்திற்கு மிக முக்கியமானது அவற்றை நாம் பேண வேண்டும். எமது பெரியவர்கள் சொன்னார்கள்: 'இடம்பட வீடிடேல்'. வீணான முறையில் செம்மண் பகுதியில் வீடுகளை விஸ்தாரமாக அமைக்கக் கூடாது. தொழிற்சாலைகள் போன்றவற்றை அங்கு அமைக்கக் கூடாது".

போதனைகள்! மகத்துவமிக்க போதனைகள். ஆனாலும் போதனைகள் வெறும் சுலோகங்களாகவே இங்கு உறங்கி விடவில்லை. அவற்றைச் சாதனைகளாக்கிக் காட்டும் சிறப்பு மிகு மனிதர் கந்தையா கனகராசா அவர்கள் சூழல் பாதுகாப்பிற்கென அவர் நல்கும் உழைப்பு மகத்தானது. தங்கப் பதக்கமென்ன இனி வருங்காலங்களில் வைரப் பதக்கமே பெறுவார் என்ற நம்பிக்கையுடன் அவரிடம் விடை பெற்றோம்.



ஒருவர்: நீர் என்ன நேரம் நித்திரைக்குப் போவது? என்ன நேரம் நித்திரை விட்டு எழும்புறது?

மற்றவர்: எழும்பிப் பல வருஷமாச்சு! இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததிலிருந்து நான் தூங்கினதே இல்லை!

## சுவடிகள்

தமிழன்:

Old is Gold என்பார்கள். என் கண்களில் தட்டுப்பட்ட சில 'தங்கங்கள். இவை ஔவையார் பாடல்கள்.

1. கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
   மூழக் குழக்குத் தினைத் தந்தாள் — சோழா! கேள்;
   உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒரு கவிதை
   ஒப்பிக்கும் என்றன் உளம்.

சோழனே! கேள்! நான் ஒரு குறமகளின் பலாமரம் தழைக்குமாறு பாடினேன். அதற்காக அவள் ஒரு படி தினை தந்தாள். என் மனம் உப்புக்காகவும், கவிதை சொல்லும் புளி வேண்டுமானால் அதற்கும் பாடல் பாடும்.

குறிப்பு:- நான்கு உழக்கு ஒரு படி. மூழக்கு — மூவுழக்கு என்பதன் மரூஉ. மூன்றுழக்கும் ஒரு உழக்கும் சேர்ந்தால் ஒரு படியாகும்.

2. பாரி பறித்த பறியும் பழையனூர்க்
   காரி கொடுத்த களைக் கொட்டும் — சேரமான்
   வாராய் என அழைத்த வாய்மையும் இம்மூன்றும்
   நீலச் சிற்றாடைக்கு நேர்.

அங்கவை, சங்கவை மழையில் நனைந்து வந்த ஔவைக்கு தங்கள் நீலச் சிற்றாடையைக் கொடுத்தனர். அதனை வேறு மூன்று சம்பவங்களுக்குச் சமமாக ஔவை பாடுகிறார்.

'பாரி' என்பவன் தன்னைப் பிரிய வேண்டாம் என்று தடுத்து ஆடையைப் பிடித்ததும், பழையனூரில் வாழ்ந்த உழவன் 'காரி' உரிமைபாராட்டித் தன்னைப்போலவே பயிரின் களையைப் பறிக்குமாறு கொடுத்த களைக்கொட்டும், சேரமன்னன் 'வருக' என அழைத்த உண்மையான அன்பும் இச்செயலுக்குச் சமமாகும்.

வாலிப முறுக்கில்:-
"நான் யாரைக் கல்யாணம் பண்ணுவது?"

நடுத்தர வயதில்:-
"யார் என்னைக் கல்யாணம் பண்ணுவது?"

முதுமையின் தளர்வில்:-
"என்னை யார் கல்யாணம் பண்ணுவார்கள்?"

புதுக்கவிதை:-

## தேர்தல்

ஆசிரியர் சொன்னார்:-

அறஞ் செய விருப்பேல்
அரசியலைக் கைவிடேல்
இயம்புவது Easy — பின்
ஈவதை நினையேல்
உண்மைகள் பேசேல்
ஊக்கமதைக் கைவிடேல்
தேர்தலை மறவேல்
தேர்ந்தவுடன் — ஓட்டு
இட்டவனையும் நினையேல்.

இறுதியில் சொன்னார்:-

ஔவையையும் மற!

— ஜோன்சன் மணிவண்ணன் —

## ஏமாற்றாதே! ஏமாறாதே!


ஒரு முறை கொழும்பில் உள்ள தேனீர் விடுதி ஒன்றில் நான் தேனீர் அருந்திக் கொண்டிருந்த போது, ஒரு தமிழரைக் காண முடிந்தது. அவர் சுத்தத் தமிழர் தான். ஆனால், நடை, உடை, பாவனைகளோ ஆங்கிலப் பாணியில் இருந்தது. நளினங்களைக் கூட ஆங்கிலத்தில் தான் செய்தார். 'ஒருவேளை அவர் தும்மியிருந்தால் கூட ஆங்கிலத்தில் தான் தும்முவார் போலும்' என்று எண்ணிக் கொண்டேன். அவரது கையைப் பார்த்தேன். ஒரு தமிழ்த் தினசரி இருந்தது. அப்போது தான் என்னால் மகிழ முடிந்தது எது எப்படியாயினும், அவரிற்கு தமிழ் மீது உள்ள உள்ளார்ந்த பற்றை எண்ணிப் பூரித்தேன். ஆனால் அவர் கடையை விட்டு வெளியேறும் போது தான் தெரிந்தது — ஒரு இறாத்தல் பாண் வாங்கிச் சுற்றிக் கொண்டு போவதற்காகத் தான் அதனைக் கொண்டு வந்திருந்தார் அவர்.

கதைத் தேன்

## தாய்ப்பாசம்

பத்து ஆண்டுகள் தவம் கிடந்து பெற்றெடுத்த ஆண் குழந்தை சுரம் காரணமாக இறந்து விட்டது. அவளது கவலை மன நோயைக் கொண்டு வருமோ என எல்லோரும் பயந்தனர். ஒரு நாள், அவள் மைதானப் பக்கம் போகையில், சிறுவர்கள் உதைபந்தாட்டம் ஆடுவதைப் பார்க்க நேர்ந்தது. மறுகணம், அவள் மயக்கம் போட்டு விழுந்து விட்டாள். அவள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டாள். வைத்தியர் ஊசி மருந்து போட்டதும் கண் விழித்தாள். வைத்தியர் மிகவும் பரிவாக, "எதைப் பார்த்ததும் மயக்கம் அடைந்தீர்கள்?" எனக் கேட்டார். அவள் "சிறுவர்கள் ஒரு பாவைப்பிள்ளையின் தலையை உதைத்து விளையாடுவதைப் பார்த்ததும் மயக்கமுற்றேன் என்று பதிலுரைத்தாள்.

தேனுகா



"வெளிநாட்டிலிருக்கும் மகனின் கடிதம் வந்தால் நவக்கிரகத்திற்கு தேங்காயெண்ணெய் சாத்துப்படி செய்வதாக நினைத்தேன். கடிதம் வந்துவிட்டது ...... இப்ப தேங்காயெண்ணெய்க்கு என்ன செய்ய!"



◉ நாளுக்கோர் புதுமை

நாடுவது உண்மை.

◉ இவற்றை

அளிப்பதுதான்.

# சீமாட்டி

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

போன் — 24413

---

உங்கள் தேவைகளுக்குகந்த வகையில்....

- பாடசாலை உபகரணங்கள்.
- காரியாலய காகிதாதிகள்.
- எழுது உபகரணங்கள்.
- சோடனைப் பொருட்கள்.

அனைத்தும்

மொத்த - சில்லறை வியாபாரிகள்

# ஆசீர்வாதம் வர்த்தக நிலையம்

61, பெரியகடை,
மருத்துவ மனை வீதி,
யாழ்ப்பாணம்.

எம் மக்களுக்கான
தேவைகளை உணர்ந்த சேவை

- றெடிமேட் ஆடைத்தினுசுகள்
- பெனி ்ன் வகைகள்
- லவித துணி வகைகள்.

அனைத்தையும் மொத்தமாகவும் - சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.....

# லைடன் ரெக்ஸ்ரையில்ஸ் சென்ரர்

249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல 22089

---

வண்ணக் குழந்தைகளே
எண்ணத்தின் இனிக்கிற
வண்ணச் சுவைதரும்
தித்திப்பு ...
0 பொபி, 0 இனிப்பு 0 கச்சான் அல்வா
வகை வகையான தயாரிப்புக்கள்
இன்னும் பிஸ்கட் வகைகள்
அனைத்திற்கும் மொத்த வியாபாரிகள்
யாழ். நகரில் ....

# விஜயா வர்த்தக நிலையம்

★ பெரிய கடை ★

64, மருத்துவமனை வீதி,
ய ழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 24184

## கார் மோகம்.

இது நான் கொழும்பில் இருந்த காலத்தில் நடந்தது. ஒரு முறை, நடன நிகழ்ச்சி நடத்துவதற்காக இத்தாலிய நடனக் குழுவொன்று வந்திருந்தது. அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தவர்கள், இளம் பெண்கள் மூன்று பேர்.

அவர்கள் தங்கியிருந்த விடுதியில் இருந்து நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்குச் சென்று கொண்டிருக்கும் போது வழியில் அவர்களது மோட்டார் வண்டி விபத்திற்குள்ளாகியது. அந்த மூன்று பெண்களுமே கோரமாய் இறந்து போனார்கள். அது என் இதயத்தைப் பிழிந்து விட்டது.

அப்போது, எனது அறைக்கு என் நண்பர் ஒருவர் வந்தார். அவர் ஒரு மோட்டார் வண்டித் தரகர். எப்போதுமே விதம் விதமான மோட்டார் வண்டிகளைப் பற்றியே பேசுபவர். அவரிடம் "அந்த விபத்தைப் பார்த்தீரா?" என்று கேட்டேன் அதற்கு அவர் சொன்னார்: "ஓம், பார்த்தேன். என்ன அருமையான கார். அநியாயமா நொருங்கிப் போச்சு!"

## உயிர்பெற்ற கதை மாந்தர்.

நடிப்புத் திறமைக்கு பெயர் வாங்குவது கடினம். வாங்கினால் எவ்வாறு வாங்க வேண்டும்?

இவ்வாறு வாங்க வேண்டும்:-


★ சிறுவயதில் சத்தியவான் சாவித்திரி நாடகம் பார்த்துக் கொண்டிருந்தேன். மிக உணர்ச்சி மயமான கட்டம்: 'சாவித்திரியின் மடியில் தலை வைத்து சத்தியவான் மயங்கிக் கிடக்கிறான், காலன் அவன் உயிரைக் கவர்ந்து செல்ல வந்திருக்கிறான்'. ரசிகர் கூட்டம் மெய்மறந்து இருக்கிறது. நடித்துக் கொண்டிருந்தவர்கள் — சத்தியவானாக நெல்லியடி கந்தவனம் (ஐயா அண்ணன்); சாவித்திரியாக கன்னிகா பரமேஸ்வரி. என் அருகில் இருந்த ஒருவர், தன் வசம் இழந்தவராக என்னைத் தட்டிச் சொன்னார்: "சத்தியவான், சாவித்திரி உயிரோடு இருந்தால் இப்பிடித்தான் இருப்பார்கள்".

★ 'சம்பூர்ண ராமாயணம்' படத்தில் சிவாஜி கணேசன் பரதனாக நடித்தார். படத்தைப் பார்த்த ராஜாஜி சொன்னார்: "பரதன் உயிரோடு இருந்தால் இவ்வாறு தான் இருப்பான்".

★ ராமாயண நாடகத்தை மகாத்மா காந்தி பார்த்தார். அதில் சீதையாக நடித்தவர், சோபனா சமார்த். காந்தி சொன்னார்: "சீதையை உயிரோடு பார்த்தது போல் இருந்தது".

## கொப்பர் கலர்

கொழும்பு வாசியான யாழ்ப்பாணத்து பெண்மணி ஒருவர் கொழும்பு புடவைக் கடைக்குள் நுழைந்தார். சேலைகள் விற்கும் பகுதியில் நின்ற விற்பனையாளனிடம் "கொப்பர் கலரிலே ஒரு சாறி எடுங்கள்" என்றார். விற்பனையாளனும் முழுக் கறுப்பு நிறத்தில் ஒரு சேலையை எடுத்துப் போட்டான். பெண்மணிக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. "என்னா மேன் நீ? 'கொப்பர்' கலரிலே கேட்டா, டேற்றி பிளாக்கிலே தாறே!" என்று ஏசினார். அதற்கு விற்பனையாளன் சொன்னான்: "அம்மா, கொப்பர் கலர் என்றீர்கள். சத்தியமாக இது என் அப்பரின் கலர் தான். அப்பா கறுப்புக் கலர் தான்!"



"ராணுவத்துக்கு மாயம், மந்திரம் ஏதும் தெரியுமோ?"
"ஏன்?"
"கைது செய்யப்படுகிற பெடியன்களெல்லாம் மாயமாய் மறைந்து விடுகினமே!"

# குருதிஷேத்திரம்

கூண்டுக்குள்ளிருந்து தப்பிச் சென்ற பின்னர், அன்று தான் தனது சொந்த மண்ணை மிதித்தான் அவன். இந்த இடைப்பட்ட காலத்தில் அவன் முழுமையான இராணுவப் பயிற்சி பெற்றுக்கொண்டதுடன், தனது திறமையை வெளிப்படுத்திய சில தாக்குதல்களில் ஈடுபட்ட பின்னர், மட்டக்களப்பு மண்ணின் வாசனையை முகர்கிறான்.

பயிற்சி முடிந்து வரும் போராளிகள் அனைவரையும் அவர்கள் பெற்றோரைச் சந்தித்துவிட்டு வருமாறு கூறுவது வழக்கம். "ராஜா, வீட்டுக்கு எப்ப போகப் போறீங்கள்? இப்ப எண்டாலும் பிரச்சினையில்ல. காம்புக்குப் பக்கத்தில போறது கொஞ்சம் சிக்கல்தான். உங்களை மட்டக்களப்பில எல்லாருக்கும் தெரியும். வேணுமெண்டா உங்கட அம்மாவுக்கு ஆள் அனுப்பி வேற இடத்தில எண்டாலும் சந்திக்கச் சொல்லுவம். எது எண்டாலும் உங்கட விருப்பம்".

ஒரு வினாடி மௌனம். "இல்ல. நான் போக விருப்பமில்ல, வீட்ட மட்டுமில்ல வெளியில எங்கயுமே போக விருப்பமில்ல. ஏனெண்டா வெளியில போறபோது எசகையாவது அம்மாவைக் காண வேண்டி வரலாம். போராட்டத்தில நான் ஈடுபட்ட பிறகு, அஞ்சு வருசம் மறியல்ல இருந்திருக்கிறன். இந்த அஞ்சு வருசமும் என்னுடைய அம்மா என்னை ஒரு கைதியாத்தான் பாத்தவ. அப்ப எல்லாம் நான் ஏங்குவேன், எப்ப என்ர அம்மா தன்னுடைய மகனை ஒரு வீரனாகப் பாக்கப் போறா எண்டு. இப்ப நான் வந்திருக்கிறன். நாங்கள் ஒரு பெரிய தாக்குதல் ஒண்டைச் செய்து, அதில நாங்கள் வெற்றி பெற்று, அதில எடுத்த ஆயுதங்களில ஒண்டைக் கொண்டு போய், அம்மாவுக்கு முன்னால நிண்டு..............."

அந்தக் காட்சி பற்றிய கற்பனையில் அவன். அந்த நினைப்பே இனிமையாய் இருந்தது அவனுக்கு. "சரி, எவ்வளவு கெதியா அடிக்கேலுமோ அவ்வளவு கெதியா அடிப்பம்" தாக்குதல் நடத்தும் தினத்தை விரைவு படுத்த வேண்டுமென்ற அவனது அவசரத்துக்குள், தாயைப் பார்க்க வேண்டுமென்ற துடிப்பை உணர்கின்றனர் போராளிகள்.

கூண்டிலிருந்து தப்பிய ஒருவருடப் பூர்த்தி தினம் அன்று. களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்த வீரர்களில் ஒருவனாகச் சென்றுகொண்டிருந்தான் பரமதேவா. "நாளைக்கு இந்த நேரம் அம்மாவோட இருப்பீங்களோ?" ஒரு போராளியின் கேள்வி இது. பரமதேவாவின் முகத்தில் பூரிப்பு.

பொலிஸ் நிலையத் தாக்குதலும் தொடங்கி விட்டது நுரையீரலில் ஒரு வெடி பரமதேவாவுக்கு. ஆனாலும் பதற்றமில்லை. சீட்டு விளையாடும்போது கேட்பார்களே அதைப் போலவே கேட்டான். "உள்ளுக்க வர ஏலாது போல இருக்கு. ஆரிட்டக் குடுக்கிறது எஸ். எம். ஜியை. இரண்டே இரண்டு உப இயந்திரத் துப்பாக்கிகள் தான் அவர்கள் கொண்டு சென்ற அற்றல் சக்தி வாய்ந்தவை. அதை நம்பித் தான் களத்தில் குதித்திருக்கிறார்கள். அவற்றில் ஒன்றை அவன் வைத்திருந்தான். அது மௌனமாக இருப்பதா? அதை தனது நண்பர்களில் ஒருவன் பேச வைக்கட்டுமே, என்பது அவனது எண்ணம்.

"காந்தனிட்டக் குடுத்திட்டு அப்படியே மறைஞ்சிடுங்கோ. கெதியா வந்திடுவம்". வார்த்தைகள் முடிய முன்னர் பொலிஸ் நிலையக் காணிக்குள் போராளிகள் திரும்பிப் பார்க்கும்போது, காயமுற்று முனகிக்கொண்டிருந்த போராளி ரவியை அவன் உற்சாகமூட்டிக் கொண்டிருந்தது கேட்டது அவர்களுக்கு. 'பார், நானும் தான் காயப்பட்டிருக்கிறன். கொஞ்சம் பொறுகெதியா வந்திடுவாங்கள்".

அந்தத் தாக்குதல் அவர்களுக்கு வெற்றியளிக்கவில்லை. திரும்பி வந்தனர் போராளிகள் பரமதேவாவையும் ரவியையும் தூக்க முயன்றனர். ரவி மூச்சடங்கிய நிலையில் பரமதேவா இந்தச் செய்தியைச் சொல்லத் தான் காத்திருந்தானோ? "என்னை நீங்கள் தூக்க மாட்டீங்கள். தூக்கிக்கொண்டு ஓடினெண்டா உங்களுக்கு ஆபத்து வரும். அதால நாங்கள் ரெண்டுபேரும் கதைச்சு முடிவெடுத்து குப்பியடிச்சிட்டம். இப்ப நீங்கள் தப்பிப் போங்கோ. மினக்கெடாமல் நான் சொல்லுற மாதிரிச் செய்யுங்கோ. ஒண்டு மட்டும் எனக்காகச் செய்யுங்கோ. அம்மாட்டப் போய்ச் சொல்லுங்கோ உங்கட மகன் சண்டையில தான் செத்தானெண்டு". மேலும் சில வார்த்தைகள்.

விக்கித்து நின்ற போராளிகளை விரைவு படுத்தினான் பரமதேவா கண்கள் கலங்க, அவனைத் தூக்க முயன்றபோது அவர்களது கையை நனைத்த அவனது குருதியை தமது காற்சட்டையில் துடைத்தவாறு தமது கால்களை இயக்குகின்றனர் போராளிகள் அவர்கள் மனத்திரையில் பரமதேவா பார்க்க விரும்பிய காட்சி!

---

ஒருவர்: டொக்டர்! நான் வலியம் சாப்பிட்டும் நித்திரை வருகுதில்லை!

வைத்தியர்: அரசாங்க சேவையில் சேரும்!

---

ஓம் சாஜிராம்

உங்கள் அத்தியாவசிய தேவை கருதி
எங்கள் சேவை தொடர்கிறது

குடாநாட்டின் துவிச்சக்கர வண்டி
★ உதிரிப்பாக விற்பனையாளர் ★

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
நாடுங்கள்

ஓம் சாஜிராம்

ஆனந்த மூர்த்தி

83 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உ

யாழ். குடாநாட்டில்

ஓர் களஞ்சியம்

★ பலசரக்குகள்

★ சாய்ப்புச் சாமான்

★ மளிகைப் பொருட்கள்

அனைத்தும்,

# மொத்தமாக விற்பனை செய்யும் ஸ்தாபனம்

★

# V. S. B.

வீ. எஸ். பாலச்சந்திரன்
(பங்காளர்களும்)

266/A ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.